செ.வெ.எண்: 04/மார்ச் நாள்: 03.03.2020

**தருமபுரி அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ் வளர்ச்சி துறை சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு கடைகள், தொழில்சாலைகள், பன்னாட்டு வணிக நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பெயர் பலகைகள் தமிழில் அமைய வேண்டுமென விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இஆப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

தருமபுரி அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ் வளர்ச்சி துறை சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு கடைகள், தொழில்சாலைகள், பன்னாட்டு வணிக நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பெயர் பலகைகள் தமிழில் அமைய வேண்டுமென விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இஆப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், ஒடிசா, கேரளா ஆகிய மாநிலங்கள் சென்னை ராஜதானி (Madras prisidency ) என்ற பெயரில் ஒரே மாநிலமாக இருந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பின் மொழி வாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்டபோது 1.11.1956இல் தமிழ்நாடு தனி மாநிலமாக உருவானது.

அதன் பின்னர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27.12.1956இல் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது முதல் தமிழ்நாட்டின் ஆட்சிமொழி, நிருவாக மொழியாக தமிழ் என்றானது. இதனை நினைவு கூரும் வகையில் ஆண்டு தோறும் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் கடைபிடிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு 20.12.2019 அன்று ஆணையிடப்பட்டது.

அவ்வகையில் தருமபுரி மாவட்டத்தில் இன்று முதல் ஒரு வாரத்திற்கு தமிழ் ஆட்சிமொழிச் சட்ட வாரம் கொண்டாடப்படுகிறது. அதில் முதல் நிகழ்வாக இன்று கடைகள், நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் 5 மடங்கு, ஆங்கிலத்தில் 3 மடங்கு, பிற மொழிகளில் 2 மடங்கு என அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.ம.சி.தியாகராஜன், முன்னாள் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.கோவிந்தராசு, தமிழ்நாடு வணிகர் சங்கத்தலைவர் திரு.வைத்தியலிங்கம் மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**